நகல்.

தமிழ் நாடு அரசு

சுருக்கம்

பணிகள் - தமிழ் நாடு அடிப்படை பணிவிதிகள் வகுப்பு
பணியாளர்கள் - பதவி உயர்வு அளித்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி எஃப்) துறை

அரசாணை (நிலை) எண் 906 நாள்: 4.9.1984

ரக்தாக்ஷி, ஆவணி 20
திருவள்ளுவர் ஆண்டு 2015.

பார்வை:

அரசாணை (நிலை எண் 292, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி எஃப்) துறை, நாள் 31.3.82.

---

ஆணை:

மேலே பார்வையிலுள்ள ஆணை வெளியிடப்படும் வரை தமிழ் நாடு அடிப்படைப் பணி வகுப்பு IV ல் வரும் பணியிடங்களுக்கு ரூ.250-5-330-10-400 என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. வகுப்பு IV ல் வரும் பணியிடங்களுக்கும் கல்வித்தகுதி எட்டாம் வகுப்பு அல்லது மூன்றாம் படிவத்தில் ( III Form ) தேறியிருக்க வேண்டும்.

2. மேலே பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையில் வகுப்பு IV ல் வரும் எல்லாப் பணியிடங்களும் வகுப்பு III ல் இனம் 6லிருந்த மசால்சி பணியிடமும் அலுவலகத் தொடர்பில்லாதவை என்றும் அப்பணியிடங்கட்கு நியமனம் செய்யத் தேவையான கல்வித்தகுதி "தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்தால் போதும்" எனவும், நிர்ணயிக்கப்பட்டதால், குறைந்த ஊதிய விகிதமான ரூ.200-5-300 என்ற அளவில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது அது குறித்து தக்க திருத்தங்கள் அரசு ஆணை (நிலை) எண் 33, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (பணி.எஃப்) நாள் 11.1.84ல் வெளியிடப் பட்டுள்ளன.

3. தமிழ் நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகளின்படி ஒரு பணியிடத்திலிருந்து மற்றொரு பணியிடத்திற்கு மாற்றிக் கொள்ளவோ அல்லது பதவி உயர்வு மூலம் நியமனம் செய்யவோ வழி வகுக்கப்படவில்லை. மேலும் 31.3.82 வரை எல்லாப் பணியிடங்களுக்கும் ஒரே விதமான ஊதியமும் வழங்கப்பட்டு வந்தது. வகுப்பு IV ல் உள்ள பணியிடங்களுக்குரிய கல்வித் தகுதியையும் ஊதியவிகிதத்தையும் குறைத்து ஆணை வெளியிடப்பட்டதால் வகுப்பு நான்கின் கீழ் வரும் பணியிடங்கள் கீழ்ப் பணியிடங்கள் எனக் கருதப்பட்டு இப்பணியிடங்களில் பணியாற்றுபவர்களை பதவி உயர்வு மூலம் முதல் மூன்று வகுப்பில் உள்ள பணியிடங்களில் நியமனம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

4. சீரிய பரிசீலனைக்குப் பின்னர் தமிழ் நாடு அடிப்படைப் பணியாளர் சிறப்பு விதிகள், வகுப்பு நான்கின் கீழுள்ள பணியிடங்களைக் கீழ்ப் பணியிடங்கள் ( Lower Categories )எனக் கருதலாம் எனவும் முதல்மூன்று வகுப்புகளுக்குத் தேவையான கல்வித் தகுதியுடன், வகுப்பு IV ல் உள்ள பணியிடங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் பதவி உயர்வு மூலம் முதல் மூன்று வகுப்புகளில் உள்ள பணியிடங்களுக்கு நியமனம் செய்யலாமெனவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த அடிப்படையில் பின்வரும் ஆணையை அரசு வெளியிடுகிறது.

1. தமிழ் நாடு அடிப்படைப் பணியாளர் சிறப்பு விதிகள், வகுப்பு IV ன் கீழுள்ள பணியிடங்களை "கீழ்ப் பணியிடங்கள்" ( Lower categories ) என கருதலாம்.

2. தமிழ் நாடு அடிப்படைப் பணியாளர் சிறப்பு விதிகள், வகுப்பு IV ன் கீழுள்ள பணியாளர்கள், எட்டாம் வகுப்பில் அல்லது மூன்றாம் படிவத்தில் ( III Form ) தேர்ச்சி பெற்றிருந்து, அப்பணியிடங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியிருந்தால் அவர்களுடைய முதுநிலையைக் கருத்தில் கொண்டு பதவி உயர்வு மூலம் முதல் மூன்று வகுப்புகளில் உள்ள பணியிடங்களுக்கு நியமனம் செய்யலாம்.

5. தமிழ் நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகட்கு தக்க திருத்தங்கள் பின்னர் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

டி.வி. அந்தோனி,
அரசு இரண்டாம் செயலாளர்.

//உண்மை நகல்//

மேலாளர்.

வரா/19/9/